Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No.175/2023**

**Deposition of PW.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :ஜெயபாரதி | ஜாதி | : |
| த/பெ | : பெருமாள் | தொழில் | : பம்ப் ஆப்பரேட்டர், காமராஜர் நீர்த்தேக்கம் |
| கிராமம் | :ஆத்தூர் | சமயம் | : |
| தாலுகா | :ஆத்தூர் | வயது | : 37/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.11.2023.

(Complaint Present. Accused A1 to A3 present)

முதல் விசாரணை

நான் ஆத்தூரில் குடியிருந்து கொண்டு காமராஜர் நீர்த்தேக்கத்தில் பம்ப் ஆப்பரேட்டராக வேலை செய்து வருகிறேன். கடந்த 18.01.2023 அன்று இரவு 09.15 மணிக்கு பால்பாக்கெட் வாங்குவதற்காக நான் எனது வீட்டில் இருந்து கடைக்கு சென்றேன். அப்போது எதிரி கண்ணன் என்பவர் என்னை வழிமறித்து தேவிடியா பயலே எங்கடா போற என்று அவரது வீட்டின் முன்பாக கேட்டார். கௌதம், கண்ணன் மனைவி காமேஷ்வரி, ஆகியோர் கையாலும் கட்டையாலும் என்னை அடித்தார்கள். கௌதம் என்பவர் கம்பியை வைத்து கொன்றுவிடுவதாக மிரட்டினார். எதிரிகள் கை, கால், முதுகு ஆகிய பகுதிகளில் அடித்தார்கள். என்னை அடிக்கும்போது எனது மனைவி சுகன்யா, எனது மாமியார் ராணி ஆகியோர் வந்து விலக்கிவிட்டார்கள். எதிரிகள் அங்கிருந்து செல்லும்போது கையில் வைத்திருந்த கம்பியை காட்டி என்னைக்கு இருந்தாலும் உன்னை கொன்றுவிடுவதாக சொன்னார்கள். பின்பு எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு ஆத்தூர் அரசு மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றேன். மேற்கண்ட சம்பவத்திற்கு பின்பு அன்று இரவு 10.00 மணிக்கு செம்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரை போலீசார் பெற்றுக்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் கொடுத்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்காமல் எதிரி காமேஷ்வரி என்பவர் கொடுத்த புகார் மீது நடவடிக்கை எடுத்து செம்பட்டி போலீசார் என் மீது வழக்கு பதிவு செய்தார்கள். அந்த வழக்கில் என்னை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார்கள். எதிரிகள் கண்ணன், கௌதம், காமேஷ்வரி ஆகியோர் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து தக்க தண்டனை எடுக்குமாறு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எதிரிகள் மீது 18.01.2023 அன்று செம்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனுவில் தேதி 03.03.2023 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 18.01.2023 அன்று கொடுத்த புகாருக்கு காவல்நிலையத்தில் ரசீது எதுவும் வாங்கவில்லை.

காமேஷ்வரியும் கண்ணனும் குடியிருக்கும் வீடு எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ளது என்றால் சரிதான். கௌதம் குடியிருக்கும் வீடு அடுத்த தெருவில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றபோது யார் யார் வந்தார்கள் என்று புகாரில் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் கட்டையால் அடித்ததாக சொல்லியுள்ள நிலையில் எந்த வகையான கட்டை என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி கௌதம் இரும்பு கம்பி கையில் வைத்திருந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த கம்பியின் நீள அகலம் தன்மை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். ஆத்தூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ சான்று எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் எதிரிகள் தாக்கி எனக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் அது ரத்த காயமா, அல்லது ஊமைக்காயமா என்று புகாரில் சொல்லவில்லை அதற்கு மருத்துவ ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சம்பவம் நடைபெற்று 42 நாட்கள் கழித்து செம்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்ற அன்றே புகார் கொடுத்துள்ளேன். அரசு மருத்துவமனையில் எத்தனை நாட்களாக வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சம்பவம் நடைபெற்ற அன்றே சிகிச்சை பெற்றுவிட்டு வரும் போது கைது செய்துவிட்டார்கள். 2வது எதிரி காமேஷ்வரி என்பவர் கொடுத்த புகார் மனுவின் மீது எனக்கு எதிராக முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். செம்பட்டி காவல்நிலையத்தில் என் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் 294(பி) 323, 324, 354(சி), 506(*ii*) என்ற பிரிவுகளின் அடிப்படையில் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்கண்ட வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது நடக்காத சம்பவத்திற்காக இந்த புகாரை கொடுத்து அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் நான் கொடுத்த புகார் மனுவிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

P JAISANKAR Digitally signed by P JAISANKAR

District Munsif cum Judicial Magistate
Athoor.